[1982 மார்ச் 3

1980-81 ஆம் ஆண்டில் வணிக வரிச் சோதனைகளால் அரசுக்குக் கிடைத்த தொகை.

* வினா எண். 324.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட வணிக வரிச் சோதனைகளில் அரசுக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகள் மூலமாக அரசாங்கத்திற்கு கிடைத்தது ரூ. 1,539 இலட்சமாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது ரூ. 1,539 இலட்சம் அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். இது இதற்கு முந்திய ஆண்டு கிடைத்ததைவிட அதிகமா ? இம் மாநிலத்தில் எவ்வளவு இடங்களில் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன? இதை அதிகப் படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படி சோதனைச் சாவடிகள் மூலமாக பரிசோதனைகள் செய்வது ஆண்டுக் காண்டு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்திருக்கிறது. 1981–82 இன்னும் முடியவில்லை. அதிலும் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் பல்வேறு இடங்களுக்குப் போகும் போது வழியில் பார்க்கிறேன் இந்தச் சோதனைச் சாவடிகளில் சரிபார்ப்பது என்பது ஒரு சடங்காகத்தான் நடைபெற்று வருகிறது. லாரிக்காரர்கள் பில்களைக் கொடுக்கிறார்கள். அலுவலர்கள் முத்திரை போடுகிறார்கள். என்றில்லாமல் லாரிகளுக்கு உள்ளே சென்று சரிபார்ப்பதற்குப் போதுமான அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா? சோதனைச் சாவடிகளில் இருப்பவர்கள் முறையாக சரிபார்க்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு ''பறக்கும் படை'' அமைக்கும் உத்தேசம் உண்டா!

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பறக்கும் படை அரசிடம் இல்லை. ஏனென்றால் அது பறந்துவிடும் என்பதால். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மையல்ல என்றாலும் ஆயிரக்கணக்கான லாரிக்

1982 மார்ச் 3]

போகிறபோது எல்லா லாரிகளின் சரக்குகளையும் கீழே இறக்கி பரிசோதனை செய்து அனுப்புவது என்பது சங்கடமாக இருக்கும். நம் மாநிலத்தில் இருக்கிற லாரிகளில் எந்தெந்த லாரிகள் தவறான வழியில் கொண்டு போகிற லாரிகள் என்ற கணக்கு இருக்கிறது. அந்த லாரிகள் வருகிறபோது கண்டிப்பாக சாமான்களை சரக்குகளைக் கீழே இறக்குகிறார்கள். எந்தெந்த வியாபாரிகள் அப்படிச் செய்கிறார்கள் என்பதற்கும் கணக்கு இருக்கிறது. அவைகள் வருகிறபோது கொஞ்சம் அதிகமாகக் கவனிக்கிறார்கள். ஆயிரக் கணக்கான லாரிகள் போகும் போது எல்லா லாரிகளையும் நிறுத்தினால் போக்குவரத்து நிச்சயமாக ஓடாது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சோதனைச் சாவடிகளில் லாரிகளை நிறுத்தும் போது போக்குவரத்துக்கு மிக இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, நீண்ட நேரம் சில நேரங்களில் நிற்க வேண்டியதாகிவிடுகிறது. துகவே, எல்லா லாரிகளையும் சோதனைச் சாவடிகளில் நிறுத்துவதற்கு, அந்த சாலை ஓரங்களில் அதற்கென்று ஒரு இடத்தை எடுத்து ஒதுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலிலேயே இதைத்தான் சொன்னேன். அதேபோல் தேவைப்படுகின்ற லாரிகளில் நிச்சயமாக தவறாக சாமான்கள் போவது, முறையற்ற முறையில் போவது தெரிந்தால் நிச்சயமாக அவைகளைத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. அப்போது கூடிய மட்டும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல்தான் காரியங்கள் நடக்கின்றன. எங்கே அப்படி இடைஞ்சல் ஏற்படுகிறது என்று சொன்னால், அதை அரசு கவனிக்கும்.

திரு. நா. சுந்தரராஜ்:—பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளின் விளைவாக சுமார் 15 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்திருப்பதாக கூறினார்கள். ஆனால், பல இடங்களில் சோதனை சரியாக நடக்க வில்லை. என்பதை குற்றச்சாட்டாக மட்டுமல்ல, உண்மை என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டை ஆலங்குடியில் இன்றைக்குக் கூட பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அளவிலே அங்கே வரி மோசடி நடைபெறுகிறது. அரசாங்கத்துக்கு வர வேண்டிய வரியைக் கொடுக்காமல், அங்கே லாரி லாரியாக எண்ணையைக் கடத்திக் கொண்டு போகப்படுகிறது. இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறிப்பு முதலிலேயே அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. கடுமையான நடவடிக்கை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவி செய்தால், அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அங்கே தவறு நடக்கிறது என்ற குறிப்பு, விவரங்கள் அரசுக்கு வந்திருக்கிறது.

நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஊதியம்.

* வினா எண். 325 திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நிதி உதவி பெற்று நடந்துவரும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசே நேரிடையாக ஊதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதை பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாக அவ்வப்போது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(ஆ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரிடையாக ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறையில் ஆசிரியர்களுக்கு பல்வேறு சங்கடங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. என்றாலும், அப்பேர்ப்பட்ட முறையீடுகளைத் தவிற்கவும், அதிலே ஏற்படக்கூடிய முறைகேடுகளைப் போக்குவதற்கும், அரசு அவர்களுக்கு சம்பளத்தை பாங்கு சிஸ்டம் மூலம் செக்கை அவர்களுக்கு நேரடியாகக் கொடுத்து, சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு நாம் நேரடியாக ஊதியம் தந்து வருகிறோம். தங்களு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS